1982 பிப்ரவரி 5]

தனியார் விடுதிகளில் தங்கியிருக்கும் தாழ்த்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு அளிக்கப்படும் சகாயத் தொகை.

*வினா எண். 60—திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்காக தனியார் நடத்தும் விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு சகாயதொகையாச ரூ. 30 கொடுக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை ரூ. 50 ஆக உயர்த்தித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்காக தனியார் நடத்தும் விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் சகாயத் தொகையினை கீழ்க்கண்ட விகிதங்களில் 1981–82 கல்வியாண்டிலிருந்து அதிகரித்து வழங்க அரசு நிலை ஆணை எண். 633, ச. ந. து. நாள் 27–8–1981ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

வரிசை எண்.		மாணவர் ஒருவருக்கு அளிக்கப் பட்ட சகாயத் தொகை.	உயர்த்துப் பட்ட தொகை	தற்போது அனுமதிக் கப்படும் தொகை
		ரூ.	ரூ.	ரூ.
1.	சென்னை நகரம், மாவட்டம் மற்றும் வட்ட தலைமையிடங்களில் உள்ள தனியார் விடுதிகள்.	35	10	45
2.	மற்ற இடங்களில் உள்ள தனியார் விடுதிகள்.	30	10	40
3.	தனியார் விடுதிகள் .. (பழங்குடியினர்க்கு)	36	10	46

திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நடத்துகின்ற விடுதிகளை அரசே ஏற்று நடத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அத்தகைய திட்டம் அரசு பரிசீலனையில் இல்லை.

திரு ப. பொன்னுரங்கம்; தலைவர் அவர்களே, என் தொகுதியில் தாழ்த்தப்பட்ட மாணவியர்களுக்கான ஆஸ்டல் கட்டிடம் கட்டப்பட்டு, வெகு நாட்களாகத் திறக்கப்படாமல் இருக்கிறது. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி தனியார் துறையைப் பற்றியது. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

3. அறிவிப்பு

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன் வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) எதிர்பாரா செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்,

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.